## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 3-2 - ஊன் வாட
## (திருச்சித்திரகூடம் 1)

1158 * ஊன் வாட உண்ணாது உயிர் காவலிட்டு *
உடலில் பிரியாப் புலன் ஐந்தும் நொந்து *
தாம் வாட வாடத் தவம் செய்ய வேண்டா *
தமதா இமையோர் உலகாளகிற்பீர்! **
கானாட மஞ்ஞைக் கணமாட மாடே *
கயலாடு கானீர்ப் பழனம் புடை போய் *
தேனாட மாடக் கொடியாடு * தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 1

1159 காயோடு நீடு கனி உண்டு * வீசு
கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் * ஐந்து
தீயோடு நின்று தவம் செய்ய வேண்டா *
திருமார்பனைச் சிந்தையுள் வைத்துமென்பீர்! **
வாயோது வேதம் மல்கின்ற தொல் சீர் *
மறையாளர் நாளும் முறையால் வளர்த்த *
தீயோங்க ஓங்கப் புகழோங்கு * தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 2

1160 வெம்பும் சினத்துப் புனக்கேழல் ஒன்றாய் *
விரிநீர் முது வெள்ளம் உள்புக்கு அழுந்த *
வம்புண் பொழில் சூழ் உலகு அன்றெடுத்தான் *
அடிப்போது அணைவான் விருப்போடு இருப்பீர்! **
பைம்பொன்னும் முத்தும் மணியும் கொணர்ந்து *
படை மன்னவன் பல்லவர் கோன் பணிந்த *
செம்பொன் மணி மாடங்கள் சூழ்ந்த * தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 3

1161 அருமாநிலம் அன்று அளப்பான் குறளாய் *
அவுணன் பெருவேள்வியில் சென்று இரந்த *
பெருமான் திருநாமம் பிதற்றி * நுந்தம்
பிறவித் துயர் நீங்குதும் என்னகிற்பீர்! **
கருமா கடலுள் கிடந்தான் உவந்து *
கவைநா அரவின் அணைப் பள்ளியின் மேல் *
திருமால் திருமங்கையோடாடு[1] * தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 4

1162 கோமங்க வங்கக் கடல் வையம் உய்யக் *

---

[1] திருமங்கையொடாடு

குலமன்னர் அங்கம் மழுவில் துணிய *
தாம் அங்கு அமருள் படை தொட்ட வென்றித் *
தவமா முனியைத் தமக்காக்ககிற்பீர்! **
பூமங்கை தங்கிப் புலமங்கை மன்னிப் *
புகழ் மங்கை எங்கும் திகழ புகழ் சேர் *
சேமங்கொள் பைம்பூம் பொழில் சூழ்ந்த * தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 5

1163 நெய்வாய் அழல் அம்பு துரந்து * முந்நீர்
துணியப் பணி கொண்டு அணியார்ந்து * இலங்கு
மையார் மணிவண்ணனை எண்ணி * நுந்தம்
மனத்தே இருத்தும்படி வாழ வல்லீர்! **
அவ்வாய் இளமங்கையர் பேசவும் தான் *
அருமாமறை அந்தணர் சிந்தை புக *
செவ்வாய்க் கிளி நான்மறை பாடு * தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 6

1164 மௌவல் குழல் ஆய்ச்சி மென்தோள் நயந்து *
மகரம் சுழலச் சுழல் நீர் பயந்த *
தெய்வத் திருமாமலர் மங்கை தங்கு *
திருமார்பனைச் சிந்தையுள் வைத்துமென்பீர்! **
கௌவைக் களிற்றின் மருப்பும் பொருப்பில் *
கமழ் சந்தும் உந்தி நிவா வலங்கொள் *
தெய்வப் புனல் சூழ்ந்து அழகாய * தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 7

1165 மாவாயின் அங்கம் மதியாது கீறி *
மழைமா முது குன்று எடுத்து * ஆயர் தங்கள்
கோவாய் நிரை மேய்த்து உலகுண்ட மாயன் *
குரைமா கழல் கூடும் குறிப்புடையீர்! **
மூவாயிரம் நான்மறையாளர் * நாளும்
முறையால் வணங்க அணங்காய சோதி *
தேவாதி தேவன் திகழ்கின்ற * தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 8

1166 செருநீல வேற்கண் மடவார் திறத்துச் *
சினத்தோடு நின்று மனத்தால் வளர்க்கும் *
அருநீல பாவம் அகலப் புகழ் சேர் *
அமரர்க்கும் எய்தாத அண்டத்து இருப்பீர்! **
பெருநீர் நிவா உந்தி முத்தம் கொணர்ந்து * எங்கும்
வித்தும் வயலுள் கயல் பாய்ந்து உகள *
திருநீலம் நின்று திகழ்கின்ற * தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 9

1167 * சீரார் பொழில் சூழ்ந்து அழகாய * தில்லைத்
திருச்சித்ர கூடத்து உறை செங்கண் மாலுக்கு *
ஆராத உள்ளத்தவர் கேட்டு உவப்ப *
அலைநீர் உலகுக்கு அருளே புரியும் **
காரார் புயற்கைக் கலிகன்றி * குன்றா ஒலிமாலை
ஓர் ஒன்பதோடு ஒன்றும் வல்லார் *
பாரார் உலகம் அளந்தான் அடிக் கீழ்ப் *
பலகாலம் நிற்கும்படி வாழ்வர் தாமே 10

**அடிவரவு:** ஊன் காயோடு வெம்பும் அருமா கோமங்க நெய் மௌவல் மாவாயின் செரு சீரார் வாட